# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 69

ஜுலை 2014

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**அப்போஸ்தலர்**

3401 ஊழியக்காரனே! ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற (16:2) ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திரு (6:4)

3402 விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஊழியஞ்செய் (6:8)

3403 ஊழியக்காரனே! உன் மேல் அநேகர் கண்ணோக்கமாயிருக்கிறார்கள்; உன் முகம் தேவதூதன் முகம் போலிருக்கிறதா?

3404 பொறாமை கொள்ளாதே (7:9, 13:45)

3405 விக்கிரகத்தை உண்டு பண்ணாதே; அதற்குப் பலியிடாதே; தேவன் உன்னை விட்டு விலகுவார் (7:41,42)

3406 வணங்காக் கழுத்துள்ளவனாயிராதே (7:51)

3407 இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம் பெறு (7:51)

3408 பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நில்லாதே (7:51)

3409 நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள் (7:53)

3410 மன்னிக்கும் குணம் கொண்டிரு (7:60)

3411 தேவபக்தியுள்ளவனாயிரு (8:2, 10:2)

3412 எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கி (8:4)

3413 கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கி (8:5, 35)

3414 இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கி (9:27,29)

3415 தேவ வசனத்தை ஏற்றுக்கொணடவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணு (8:16)

3416 தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதிக்க நினையாதே (8:20)

3417 உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிருப்பதாக (8:21)

3418 நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பு (8:22)

3419 கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கி (8:25)

3420 பிரயாணம் பண்ணி, பட்டணங்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கி (8:40, 14:21)

3421 நீ இயேசுவை துன்பப்படுத்தாதே (9:4,5)

3422 கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நீ பாடுபடவேண்டியதிருக்கும் (9:16)

3423 ஊழியக்காரனே! சபைகள் சமாதானம் பெறுவதாக (9:31)

3424 ஊழியக்காரனே! சபைகள் பக்திவிருத்தியடைவதாக (9:31)

3425 ஊழியக்காரனே! கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் பெருகுவதாக (9:31)

3426 ஊழியக்காரனே! சபைகளில் பரிசுத்த ஆவியின் ஆறுதல் பெருகுவதாக (9:31)

3427 தபீத்தாளைப் போல நற்கிரியைகளை மிகுதியாய்ச் செய் (9:36)

3428 தபீத்தாள் / நூற்றுக்கு அதிபதி போல மிகுந்த தருமங்களைச் செய் (9:36, 10:2)

3429 நூற்றுக்கு அதிபதியைப் போல உன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்திரு. (10:2,22)



3430 எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணு (10:2)

3431 எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் சொல்லாதே (10:28)

3432 உபவாசித்து ஜெபம் பண்ணு (10:30, 12:2,3, 14:23)

3433 தேவனாலே கட்டளையிடப்பட்ட யாவையும் கேள் (10:33)

3434 தேவனுக்குப் பயந்து, நீதியைச் செய். அவனே தேவனுக்கு உகந்தவன் (10:35)

3435 தேவனை விசுவாசி. நீ அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவாய் (10:43)

3436 உன் திராணிக்குத் தக்கதாக உதவி செய் (11:29)

3437 சபையாராக தேவனை நோக்கி ஊக்கத்தோடு ஜெபம் பண்ணுங்கள் (12:5)

3438 வீட்டில் அநேகர் கூடி ஜெபம் பண்ணுங்கள் (12:12)

3439 கர்த்தருக்கு ஆராதனை செய் (13:2)

3440 கபடமும் பொல்லாங்கும் வேண்டாம் (13:10)

3441 பிசாசின் மகனாயிராதே (13:10)

3442 நீதிக்குப் பகைஞனாயிராதே (13:10)

3443 கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டாதே (13:10)

3444 தேவனுக்குப் பயந்து நட (13:16,26)

3445 தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனாயிரு (13:22)

3446 தேவனுக்கு சித்தமானவைகளையெல்லாம் செய் (13:22)

3447 தாவீது போல தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய் (13:36)

3448 தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி ஜனங்களுக்கு புத்திச்சொல்லு (13:43)

3449 நித்திய ஜீவனுக்கு அபாத்திரனாக உன்னைத் தீர்த்துக்கொள்ளாதே (13:46)

3450 விசுவாசிக்கத்தக்கதாக பிரசங்கி (14:1)

## துதியுங்கள்!

13-6-2014 அன்று மதுரை MUF குழுவினர் நமது ஒரு மிஷனெரி தம்பதியினரை பொறுப்பேற்க முன்வந்தனர். MUF மாதாந்திர உபவாச ஜெபத்தில் திரு. ஆனந்குமார் - திருமதி. அனிற்றா ஆனந் பொறுப்பேற்கப்பட்டனர். இவர்கள் மதுரை MUF குழுவினரால் நம் ஊழியத்தில் தாங்கப்படும் 11 மற்றும் 12 வது மிஷனெரிகளாகும். MUF குழுவினர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். அவர்களுக்கு ஜெபிக்கிறோம்.

நாகர்கோவிலை சேர்ந்த திரு. குணசீலன் குடும்பத்தினர் நமது ஊழியத்திற்கு ஒரு ஜெனரேட்டர் வாங்க உதவி செய்ததன் மூலம் தேவன் 21-6-2014 அன்று ஒரு புதிய நற்செய்தி கூட்டங்களுக்கு பயன்படுத்தும் அளவில் பெரிய ஜெனரேட்டரை வாங்க கிருபை செய்தார். அக்குடும்பத்தினருக்காக தேவனைத் துதியுங்கள்.

நமது ஊழியர் திரு. சைமன் தம்பதியருக்கு 28-5-2014 அன்று இரண்டாவதாக ஒரு பெண் குழந்தையை சுகப்பிரசவத்தில் கொடுத்தார். தேவனைத் துதியுங்கள்.

# வேதாகமத்தில் தலைமைத்துவம்

**Dr. P. செல்வராஜ்** பொள்ளாச்சி

| எண் | பெயர் | வேதபகுதி | தலைமைத்துவ பண்புகள் |
|---|---|---|---|
| 1. | தாவீது | 2சாமு. 23:13-17 | தோள் கொடுப்போரின் நலனில் அக்கறை |
| 2 | நெகேமியா | நெகே. 6:1-15 | விவேகமும், கவனம் சிதறாமையும் |
| 3 | அபிகாயில் | 1சாமு. 25:14-34 | பொறுப்பேற்கும் தன்மை |
| 4 | எஸ்தர் | எஸ். 5:1-8 | முறையானதும், பொறுமையுடனும் கூடிய அணுகுமுறை |
| 5 | எத்ரோ | யாத். 18:13-26 | பொறுப்பு பகிர்வு |
| 6 | தெபோராள் | நியா. 4:4-9 | தருணத்திற்கேற்ப பொறுப்பெடுத்தல் |
| 7 | கிதியோன் | நியா. 7:1-9 | உடன் ஊழியர்களைத் தெரிந்தெடுப்பதில் அர்ப்பணம் |
| 8 | யோதாம் | நியா. 9:7-20 | அறைகூவல் விடுக்கும் தெளிவு |
| 9 | யெப்தா | நியா. 11:1-10 | மனம் தளராமை |
| 10 | மூப்பர்கள் | 1பேது. 5:1-5 | முன்மாதிரியான தலைமைத்துவம் |
| 11 | உதவியாளர்கள் | அப். 6:1-7 | பொறுப்புகள் பகிர்ந்து கொள்ளப்படுதல் |

## BECOME A COMPLETE CHAMPION

Michael J. Herman

www.michaeljherman.com

1. சிலர் தலைமைத்துவம் பயிற்றுவிக்கப்பட வேண்டிய ஒன்று என்று கருதுவர். வேறு சிலர் தலைமைத்துவத்தோடு பிறக்கிறவர் உண்டு என்று கூறுவர். இரண்டு கருத்துக்களிலும் உண்மை இருக்கிறது.
2. பெரிய தலைவர்கள் இருக்கிறார்கள். சிறப்பாக செயல்படுகிறவர்கள் இருக்கிறார்கள் மற்றும் ஆழமாக சிந்திக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவ்வப்போது இம்மூன்று சிறப்புகளையும் ஒருங்கே உடைய ஒருவர் பிறக்கிறார். அதற்கு எடுத்துக்காட்டாக, 'மைக்கேல் ஏஞ்சலோ' வை கூறலாம். ஏனெனில், அவர் ஓவியராக, சிற்பியாக, பொறியியலாராக, எழுத்தாளராக மற்றும் பொதுநல சிந்தனையாளராக இருந்தார். அவர் ஒருமுறை இவ்வாறு கூறினார். "நம்முடைய பிரச்சினை உயர்ந்த இலக்கை வைத்து அதைத் தவற விட்டுவிடுவதல்ல, மாறாக, குறைந்த இலக்கை வைத்து கொண்டு அதை அடைந்து விடுகிறோம் என்பதே"
3. என்ன நேர்ந்தாலும், நாம் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டிருந்தாலும் எத்தனை இன்னல்கள் நமக்கிருந்தாலும், நடக்கப்போவது எதுவாக இருந்தாலும் நண்பர்களே, உங்களால் "அதை செய்ய முடியும்.



4. நீங்கள் முயற்சியை விட்டுவிடும்போது தோல்வி அடைவதற்கு உங்களுக்கு நீங்களே அனுமதி தருவது போலாகும். மற்றவர்கள் உங்களால் முடியாது என்று கூறலாம். அல்லது, உங்களுடைய முயற்சியை நீங்கள் கைவிட்டுவிட வேண்டும் என்று கூறலாம். ஆனால், அதற்கெல்லாம் நீங்கள் உடன்படாதிருந்தால் நல்லதோர் போராட்டத்தை நீங்கள் போராடலாம். எதுவரை என்றால், நீங்கள் கடைசி ஆளாக நிலைத்து நிற்கும் வரை.
5. மாமனிதர்களைப் பற்றி நாம் நினைக்கும்போது அவர்களுடைய சிறப்பிற்குப் பின்னணியில் இருப்பது, அவர்களுடைய மற்றவர்களை வியப்பில் ஆழ்த்தும் ஏதாவதொரு செயல்பாடாக அல்லது சாதனையாக இருக்கும். அம்மனிதர்கள் எப்போதும் புதிய சிகரங்களை அடைபவர்களாகவும், சிறப்பின் புதிய அளவை எட்டுகிறவர்களாகவும் இருந்திருப்பார்கள். தங்களுடைய தரிசனத்தைப் புதிய வழிகளில் வெளிப்படுத்துவதற்கு தொடர்ந்து முயலுகிறவர்களாக அவர்கள் இருந்திருக்க வேண்டும்.
6. ஆற்றில் தொடரலைகளைத் தோற்றுவிக்க ஒரு சிறிய கூழாங்கல் போதும். அதைப்போல, உங்களுடைய வாழ்க்கையையும், ஏன் உலகத்தையும் மாற்றுவதற்கு உங்களுடைய சிறிய முயற்சி ஒன்று போதுமே.
7. ஒரு சாதாரண மனிதனுக்கும், ஒரு அசாதாரணமான மனிதனுக்கும் இடையில் உள்ள வேறுபாடு இதுதான். முதலாமவரைப் பார்க்கிறவர்கள் ஓ! அவருடைய செயல்பாட்டைப் பார்த்தீர்களா என்று கூறுவர். இரண்டாமவரைப் பார்க்கிறவர்கள் ஓ! அந்த மிருகம் செய்ததைப் பார்த்தீர்களா என்று கூறுவர். உண்மைதான்! அசாதாரணமான விலங்குகளும் இருக்கத்தான் செய்கின்றன!!
8. இதோ அற்புதமானதோர் வாழ்க்கைக்கு ஒரு உணவு தாயாரிக்கும் முறை : ஒரு கிண்ணத்தில் ஞானத்தை எடுத்து கொண்டு, அதில் ஒரு தேக்கரண்டி பொறுமையையும், இரண்டு அளவு தீரத்தையும், மூன்று அளவு நிச்சயமின்மையையும், நான்கு அளவு அறிவாற்றலையும், சற்று அதிகமாக அன்பையும் சேர்த்துக்கொள்ளுங்கள். எல்லாவற்றையும் நன்றாகக் கலக்கி பல ஆண்டுகள் அப்படியே வைத்திருந்து பிறகு உலகிற்குக் காட்டுங்கள்.
9. போட்டியிடுபவர்களுக்குத் துணிச்சலும், மனித சமுதாயத்திற்கு நன்மை செய்ய வேண்டும் எனும் உந்துதலும், தடைகளை மேற்கொள்ளும் துணிச்சலும், தன்னுடைய அனுபவத்தைப் பிறருக்குத் தெரியப்படுத்துவதில் திறனும் இருக்குமாயின் அவர்கள் முழுமையான வெற்றியாளர்களாவது திண்ணம்.
10. வாழப்படாத வாழ்க்கை ஒன்றுமில்லாத வாழ்க்கை, அனுபவம் இல்லாத வாழ்க்கை ஒன்றுமில்லாத வாழ்க்கை, ஆராயப்படாத வாழ்க்கை ஒன்றுமில்லாத வாழ்க்கை, நீங்கள் தயங்கினால், சந்தேகித்தால் உங்களுக்குள் இருக்கும் வல்லமையுள்ள, உண்மையான தன்மையைப் பாராவிட்டால், உங்களுக்கு இலக்கு இல்லை என்பது பொருள்.

## கிறிஸ்துவைப் போன்ற தலைமைத்துவ பண்புகள்

**Pastor. Paul Chappell**

(www.paulchappell.com)

எல்லோருமே ஏதாவது ஒரு வகையில் தலைமைத்துவத்திற்கு என்று அழைக்கப்பட்டவர்கள். ஒரு தந்தை குடும்பத்தில் ஆவிக்குரிய வழிகாட்டியாக இருக்கிறார். பெற்றோர் பிள்ளைகளின் வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் வகுப்பை நடத்துகிறார். உரிமையாளர் உழைப்பார்களின் தலைவராக இருக்கிறார். ஒரு போதகர் சபையை வழி நடத்துகிறார். மூத்த மாணவர்கள் இளைய மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். சுருங்கக்கூறின், ஒவ்வொருவரும் யாராவது ஒருவருக்கு வழிகாட்டியாக இருக்கிறோம். கிறிஸ்துவைப் போன்ற தலைமைத்துவத்துக்குரிய முக்கியமான அம்சங்கள் பின்வருமாறு : நாம் எந்த பொறுப்பில் இருந்தாலும் நமக்கு அவை பயன்படும்.

1. இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுதல்
2 சுயத்திற்கு முதலிடம் கொடுக்காமல் இருத்தல்
3. தேவ ஆவிக்குப் பணிதலும், அதனால் நிரப்பப்படுதலும்
4. ஒழுக்கமுள்ள வாக்கை
5. வேதாகமத்தையும், இதர நல்ல புத்தகங்களையும் தொடர்ந்து வாசித்தல்.
6. தேவ ஞானத்தை நாடி, கேட்டு, பெற்றுக்கொண்டு பயன்படுத்துதல்
7. உண்மையுடனும், கரிசனையுடனும் இருத்தல்
8. தேவனுக்குகந்த நண்பர்களை உடையவர்களாக இருத்தல்
9. மன்னிக்க அறிந்திருத்தல்
10. இயேசுவினால் ஏற்றுக்கொள்ளப்படுதல்
11. பிறருக்காக ஜெபித்தல்
12. பிறர் முன்னேற உதவி செய்தல்
13. தரிசனத்துக்கும், விருப்பத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அறிந்து வைத்திருத்தல்
14. தரிசனத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் இருத்தல்
15. ஊழியத்தின் அவசரத்தைப் புரிந்து கொள்ளுதல்
16. மன உறுதியுடன் இருத்தல்
17. இரக்கத்துடன் நடந்து கொள்ளுத்
18. இயேசுகிறிஸ்துவை நேசிப்பதில் வளருதல்
19. குடும்பத்தை நேசித்தல்
20. சபையை நேசித்தல்

இந்தப் பட்டியலை பார்க்கும்போது நமக்கு தயக்கம் ஏற்படுவது இயல்பு. ஏனெனில், நாமாகவே மேற்கூறிய பண்புகளைப் பெற்றுக்கொள்ள இயலாது. ஆனாலும் இந்தப் பட்டியலால் நீங்கள் உற்சாகத்தை இழக்க வேண்டாம். அது தேவனுடைய வல்லமைக்கு நேராக உங்களை வழிநடத்தட்டும். ஒன்று நிச்சயம். தேவனுடைய



அழைப்பைத் தொடர்ந்து தேவனால் நாம் பலப்படுத்தப்படுகிறோம் என்பதை மறந்துவிட வேண்டாம். தேவனால் நீங்கள் தலைமைத்துவத்திற்கென்று அழைக்கப்பட்டிருந்தால் அதற்கு தேவையான அவருடைய வல்லமை உங்களுக்கு உண்டு.

### ஆவிக்குரிய தலைவருக்கான 10 அடையாளங்கள் (எபே. 5:18)

ஆவிக்குரிய தலைவர் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவராக இருக்க வேண்டும். அவருடைய வல்லமையானது செய்யமுடியாததைக் கூட செய்துவிடும். ஆவியினால் நிரப்பப்பட வாழ்க்கை எப்படி இருக்கும்?

1. ஒப்பு கொடுக்கப்பட்ட வாழ்க்கை
2. தேவ பக்தி
3. பிறரைப் பரிசுத்தத்திற்கு நேராக நடத்துதல்
4. ஆவிக்குரிய முன்னுரிமைகளைப் பேணுதல்
5. பிறரைக் கிறிஸ்துவண்டை நடத்துதல் (அப். 1:8)
6. கீழ்ப்படிதலும், கவனித்தலும்
7. ஒழுங்கு
8. பட்சபாதமின்மை
9. சோதனை நேரத்தில் கிருபை (எபி. 4:16)
10. ஆவிக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்துதல்

### பணிவிடைத் தலைமைத்துவத்தின் 5 கிருபைகள்

இராணுவமானது அடித்தளத்திலிருந்து மேல்நோக்கி தலைவர்களை உருவாக்குவதைப்பற்றிப் பேசுகிறது. ஆனால் பரலோகத்தில் இருந்து கீழ்நோக்கி தலைவர்களை உருவாக்குவதே தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. இதற்குரிய எடுத்துக்காட்டை பிலி. 2:15-18ல் நாம் பார்க்கிறோம். உலகம் கூறும் தலைமைத்துவம் பணிவிடைத் தலைமைத்துவத்திற்கு எதிரானது. முன்னது பணிவிடை பெற்றுக்கொள்ளும் உரிமைப்பற்றியது. பின்னது பணிவிடை செய்யும் வாய்ப்பைப் பற்றியது பணிவிடைத் தலைமைத்துவம் கிருபையில் துவங்கி கிருபையுடன் செயல்படுகிறது. (2பேதுரு 3:18)

**1. தேவனுக்கு முதலிடம்**

கிருபை பொருந்திய இதயம் விக்கிரக ஆராதனையைத் தவிர்க்கிறது. (எபி. 13:9)

**2. மனத்தாழ்மை**

கிருபை பொருந்திய இதயம் அகந்தையைத் தவிர்க்கிறது. (யாக். 4:6)

**3. பெலவீனம்**

நம்முடைய பெலவீனமே தேவனைக் கவருகிறது பெலனல்ல. (2கொரி. 12:9)

**4. ஆராதனை**

ஆராதனையின்றி தலைவராக செயல்பட முடியாது (யோசு. 5:13,14)

**5. ஊழியத்தில் மகிழ்ச்சி**

தலைமைத்துவத்திற்கான புதிய ஏற்பாட்டு ஆயுதம் ஒரு பிரம்பு அல்ல, ஒரு துவாலை ஆகும். பணிவிடைத் தலைவர் ஒரு அரசனல்ல, ஒரு மேய்ப்பர் (யோவா. 13:4,5; 2கொரி. 1:24, 4:5) தேவகிருபை இருந்தால்தான் பணிவிடைத் தலைமைத்துவம் இருக்கும். எனவே, தேவகிருபையில் நாம் வளர வேண்டும்.

(2பேதுரு 3:18)

### பணிவிடைத் தலைமைத்துவத்திற்கான 3 குணநலன்கள்

உயர்நிலை தலைமைத்துவத்திற்கு, உயர்நிலை மனத்தாழ்மை இன்றிமையாதது (பிலி. 2:7)

1. பணிவிடைத் தலைவருக்கு பதவி முக்கியமல்ல குழுவில் இருப்பதே மகிழ்ச்சி (பிலி. 2:5)
2 பணிவிடைத் தலைவர் பிறருக்கு உதவுவதற்கென்றே இருக்கிறார்.
3. பணிவிடைத் தலைவருக்கு தனிப்பட்ட குறிக்கோள் எதுவும் இல்லை (மாற். 10:45)

## ஆகஸ்டு 2014 – ஜெபமாதம்

1981ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதத்தை ஜெபமாதமாக ஆசரித்து வருகிறோம். இந்த ஆண்டும் அவ்விதம் ஜெபிக்க ஆயத்தப்படுகிறோம்.

**ஆகஸ்ட் மாதத்தில் உபவாச ஜெப முகாம்**

1. நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் (ஆகஸ்ட் 15 –17 தேதிகளில்) நடைபெறும். இணைந்து உபவாசித்து ஜெபிக்க வரும்படி உங்களை அன்போடு அழைக்கிறோம். ஆண், பெண் தங்க இடவசதி செய்யப்பட்டுள்ளது.

**சிறப்பு உபவாச ஜெபங்கள்**

மாதத்தின் 31 நாட்களும் ஆங்காங்கே உபவாச ஜெபங்கள் நடைபெறும் மற்றும் நடைபெறவுள்ள உபவாச ஜெப விபரங்களை அடுத்த மாத பத்திரிக்கையில் வெளியிடுவோம். அந்த ஜெபங்களிலும் கலந்து கொண்டு தேசத்திற்காக, உலக எழுப்புதலுக்காக, ஊழியங்களுக்காக, நமக்காக ஜெபிப்போம். கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

**24 மணி நேர உபவாச ஜெபம்**

வழக்கம் போல் நடைபெறும் 24 மணி நேர உபவாச ஜெபம் இந்த ஆண்டு ஆகஸ்ட் 29ம் தேதி வெள்ளிக்கிழமை(அரசு விடுமுறை தினம்) காலை 5 மணி முதல் ஆகஸ்ட் 30 சனிக்கிழமை காலை 5 மணி முடிய நடைபெறும். இந்த நாளை நீங்கள் குறித்து வைத்து திட்டமிடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இடம் அடுத்தமாதப்பத்திரிக்கையில் வெளியிடப்படும்.

**உங்கள் வீட்டில் உபவாசித்து ஜெபிக்கலாமே!**

ஜெபமாதத்தில் பத்திரிக்கையில் ஒவ்வொரு நாளும் ஜெபிக்க ஜெபக்குறிப்புகள் தேசத்திற்காக ஊழியத்திற்காக, உலக எழுப்புதலுக்காக வெளியிடப்படும். அதை பயன்படுத்தி ஒருநாளாவது உங்கள் வீட்டில் ஒரு நான்கு மணி நேர ஜெபக்கூடுகையை ஏற்படுத்தி ஜெபிக்க திட்டமிடுங்கள்.

| ஜெபியரங்கள் | | |
|---|---|---|
| ஜுன் 28,29 | ஸ்ரீமூலக்கரை | இன்னிசையில் நற்செய்தி |
| ஜுலை 13 | மறவன்மடம் CSI | வாலிபர் வெற்றி முகாம் |
| ஆகஸ்ட் 3 | திம்மராஜபுரம் CSI | வாலிபர் வெற்றி முகாம் |



# இயேசுவின போர்வீரனாய், பிசாசோடு எதிர்த்து நிற்க

சகோ. S. ஜெபராஜ் President, Grace Ministries

கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். எனது விசுவாச வாழ்வு அறிக்கைகள் என்பதன் அடிப்படையில் தேவஒத்தாசையோடு அநேக விசுவாச அறிக்கைகளை அனுபவமாக்கும்படி தேவன் கிருபை அளித்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர அது உங்களுக்கு தேவ பெலனாயிருக்கிறது. ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் பரிசுத்தவாழ்வு வாழும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். நான் பரிசுத்தர். ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள். (லேவி. 19:2). உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். (1பேதுரு. 1:15). பரிசுத்த வாழ்வை அடைய முடியாதபடி சத்துருவாகிய பிசாசானவன் பிரயாசப்பட்டுக் கொண்டும் போராடிக்கொண்டும் நிற்கிறான். அப்போஸ்தலராகிய பரிசுத்த பவுல் எபேசு திருச்சபையின் பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த ஆலோசனை தருகிறார். அதுவே உங்களுடைய வாழ்க்கைக்கும் பொருந்தும். "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு, எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள் (எபே. 6:11) "Put on God's whole armor that you may be able successfully to stand up against the strategies and deceits of the devil"

### 1. பிசாசானவனை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

உங்கள் விரோதி யார் என்றும் என்ன செய்கிறானென்றும் அறிந்து கொண்டால் மட்டுமே வெற்றி கொள்ள முடியும். அவனையும் அவனது திட்டங்களையும் நீங்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். "உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான் (1பேதுரு. 5:8). சாத்தானே உங்கள் பிரதான எதிரி. ஆனால் நீங்கள் அவனை நண்பனாக எண்ணுமளவிற்கு உங்களோடு நெருங்கியிருக்கிறான். நீங்கள் கவனமில்லாமலிருக்கையில், ஏவாளோடு சம்பாஷித்தது போல உங்களோடும் சம்பாஷிக்கிறான். அவனோடு பேச ஆரம்பித்தால் அவன் சொல்வதெல்லாம் சரிதான் என ஒத்துக்கொண்டும் விடுவீர்கள். அவனை எதிர்க்கிற திறனை இப்படி அவன் உடைத்துப்போடுகிறான். உங்கள் எதிரியைச் சரியாக புரிந்து கொள்ளுவதுதான் உங்கள் வெற்றிக்கு முதற்படி. அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான். (யோவா. 8:44). இயேசுவானவர் சத்தியத்தைப் பேசுகிறார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறதில்லை (யோவா. 8:45). தேவ வார்த்தைகள் உங்கள் இச்சைகளை நிறைவேற்ற ஒத்துவராதபோது பிசாசின் பொய்யை விரும்புகிறீர்கள். என்ன ஆனாலும் சரி, சத்திய வசனத்தின்படி நடப்பேன் என உறுதி

கொள்வீர்களானால் பொய்யனின் சதிக்குத் தப்பித்துக் கொள்வீர்கள். சாத்தான் செய்கிற இன்னொரு வேலை அவன் உங்களது கடந்தகால பாவங்கள், நிகழ்கால தோல்விகள், எதிர்காலத்தின் நிலை இவைகளைக் குறித்து குற்றம் சாட்டிக் கொண்டேயிருப்பான். நீங்கள் சோர்ந்து, உற்சாகமிழந்து, பெலனற்று போகும்படி செய்வான். நண்பனைப் போன்று ஆனால் எதிரியாக, உண்மை பேசுபவன் போல ஆனால் பொய்யனாக, சத்தியத்தைப் பேசுபவன் போல ஆனால் சதிகாரனாக உங்களருகே கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித் திரிகிற சாத்தானை நீங்கள் அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

### உ. பிசாசின் தந்திரங்களைப் புரிந்து கொள்ளுங்கள்

உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்னும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது (வெளி. 12:9). தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. (ஆதி. 3:1). ஏவாளிடத்தில் தேவன் கட்டளையிட்ட அதே காரியத்தை அவள் ஏற்றுக்கொள்ளும்படி மாற்றிச் சொல்லியது. அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும் புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருப்பதை விளக்கிக் காண்பித்தது. பாவத்தின் இன்பத்தைக் கூறினவன் அதின் துன்பத்தை விவரிக்காமல் விட்டுவிட்டான். தேவனைப் போல நன்மை, தீமை அறியத்தக்கவர்களாய் மாறலாம் என்று ஆசை காட்டியவன், அதின் மூலம் வரப்போகிற நிர்வாணத்தையும், அவமானத்தையும், சாபத்தையும், தண்டனையையும் ஏவாளுக்கு மறைத்துவிட்டான். ஏவாள் இந்த பிசாசின் தந்திரங்களிலே சிக்கிக்கொண்டாள். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப் போல் தீண்டும். (நீதி. 23:32) என்பதை ஏவாள் உணரவில்லை. உங்களது வாழ்க்கையிலும் சத்துருவாகிய சாத்தான் தந்திரமான வலைகளை விரித்து, உலக இன்பங்களையும், செல்வங்களையும், சிற்றின்பங்களையும் காண்பித்து உங்களை மோசம் போக்கும்படியான உங்களுக்கு நயங்காட்டும்பொழுது அந்த வலைகளில் சிக்கிவிடாதீர்கள். அப்பாலே போ சாத்தானே என்று வாயினால் சொன்னால் மாத்திரம் அவன் போய்விட மாட்டான். ஒவ்வொருநாளும் ஒவ்வொரு காரியங்களிலும், தேவ வல்லமையோடு பிசாசின் தந்திரங்கள புரிந்து கொண்டு செயல்படுங்கள். அப்பொழுது ஜெயம் எடுப்பீர்கள்.

### ௩. பிசாசை எதிர்த்து நிற்க திராணி உள்ளவராகுங்கள்

"The strategies and the deceits of the devil (Ep.6:11). Strategies = the art of combining and emploing the means of war. பிசாசானவன் எப்பொழுதும் தேவபிள்ளைகளை விழத்தள்ளும்படி திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தும்படியாக போராளியைப் போல சுற்றித் திரிகிறான். அவனை ஜெயிப்பதற்கு திராணியுள்ளவர்களாக நீங்களும் போராயுதம் தரித்தவர்களாய் எப்பொழுதும் ஆயத்தம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் மாம்சத்தோடும்



இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும் வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு (எபேசி. 6:12). அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும், திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாதியுவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். (எபேசி. 6:13). உங்களுடைய ஆயுதங்கள் எவை? 'சத்தியம்' என்னும் கச்சை 'நீதி' என்னும் மார்க்கவசம். சுவிசேஷத்திறகுரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை, விசுவாசம் என்னும் கேடகம், இரட்சண்யம் என்னும் தலைச்சீரா, வேதவசனமாகிய ஆவியின் பட்டயம் எல்லாவற்றிற்கும் மேலாக ஆவியிலே ஜெபம் பண்ணி விழித்துக் கொண்டிருத்தல் (எபேசி. 6:14-18) இவைகளே பிசாசை எதிர்த்துப் போராட உங்களைத் தகுதியுள்ளவர்களும், திராணியுள்ளவர்களுமாக்கும். பாவ சோதனைகளையெல்லாம் இயேசு ஜெயித்ததுபோல வேத வசனங்களைக கொண்டு ஜெயிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். வேதத்தை வாசிப்பது வெறும் மூளை அறிவை வளர்க்க அல்ல. அவர் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம். நாங்களும் எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக்கொண்டு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நடப்போம் (மீகா. 4:5). கற்றுக்கொண்டவைகளைக் கடைபிடிப்பதுதான் பிரதானம். அவர் உங்களுக்குப் போதிப்பவர் மட்டுமல்ல, நம்மை அதன்படி நடக்கிறவர்களாகவும் செய்கிறவர் வேத வசனமாகிய ஆவியின் பட்டயம், நீங்கள் பிசாசை எதிர்த்து போரிட வல்லமையான ஆயுதமாய் விளங்கும். நீங்கள் பிசாசை எதிர்த்து நிற்கத் திராணி உள்ளவர்களாவீர்கள்.

**எனது விசுவாச வாழ்வு அறிக்கை :** பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவனா(ளா)கும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுகிறேன். நான் இயேசுவின் போர்ச்சேவகனாய் தினமும் வாழுவேன்.


## ஜெப மாதத்தின் பரிசுத்த உபவாச முகாம்

நாள் : **ஆகஸ்ட் 15,16,17 வெள்ளி, சனி, ஞாயிறு**

**ஆகஸ்ட் 15 காலை 6 மணி முதல் ஆகஸ்ட் 17 மதியம் 3 மணி முடிய**

இடம் : **கிறிஸ்து குல ஆசிரமம்,** பராசக்தி கல்லூரி எதிரில், குற்றாலம்

*தேவசெய்தி & ஜெபம் :*

**சகோ. சாம்ராஜ்,** நெல்லை **திரு. & திருமதி. மோகன்தாஸ் தம்பதியர்**

**சகோ. பொற்செல்வன் ஆசீர், சகோ. ஜெபராஜ் மற்றும் குழுவினர்**

**முகாமின் பதிவுக்கட்டணம் : ரூ. 50/- மட்டும்**

**முந்தினநாள் இரவு தங்க ஆண்பெண் தனித்தனி இடவசதி**

**முகாம் முடிந்ததும் உணவு வழங்கப்படும்.**

**தேவனுடைய சமூகத்தில், தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க அன்புடன் அழைக்கிறோம்!**

*தொடர்பு :* **94432 89026, 94421 20257, 94428 02228**

# என் சார்பு இயேசுவே

*தொகுப்பு :* சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

## கொலோசெயர்

1. நான் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும், தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்பட, தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:9)
2. நான் சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைய, தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:10)
3. நான் கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்கு பாத்திரமாய் நடந்து கொள்ள தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:10)
4. நான் சந்தோஷத்தோடே கூடிய, எல்லாப் பொறுமையும், நீடிய சாந்தமும் என்னில் உண்டாக தேவனை சார்ந்து கொள்கிறேன். (1:11)
5. நான் மகிமையான தேவனுடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும், பெலப்படுத்தப்பட தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:11)
6. நான் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைய, தகுதியுள்ளவனா(ளா)க்கப்பட தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:12)
7. நான் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாகி, அன்பின் குமாரனுடைய ராஜ்யத்தில் ஆயத்தமுள்ளவனா(ளா)க்கப்பட, தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:13)
8. முன்னே அந்நியனாயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருவாயும் இருந்த நான் பரிசுத்தனாகவும், குற்றமற்றவனாகவும், கண்டிக்கப்படாதவனாகவும் அவருக்கு முன்பாக நிற்கும்படி, தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:21)
9. நான் கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக எனக்குள்ளே இருக்கும்படிக்கு தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:27)
10. நான் எனக்குள்ளே வல்லமையாய் கிருயை நடப்பிக்கிற தேவனுடைய பெலத்திற்காக, தேவனை சார்ந்து கொள்கிறேன் (1:29)
11. நான் கிறிஸ்து இயேசுவுக்குள் வேர் கொண்டவனா(ளா)கவும் அவர்மேல் கட்டப்பட்டவனா(ளா)கவும், அவருக்குள் நடந்து கொள்ளும்படிக்கு தேவனை சார்ந்து கொள்கிறேன் (2:7)
12. நான் விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருக தேவனை சார்ந்து கொள்கிறேன் (2:7)
13. சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும், தலைவராயிருக்கிற கிறிஸ்து இயேசுவுக்குள் நான் பரிபூரணமுள்ளவனா(ளா)யிருக்க, தேவனை சார்ந்து கொள்கிறேன். (2:10)
14. தன் மாம்ச சிந்தையினாலே, வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும், என் பந்தய பொருளை நான் இழந்து போகும்படி, என்னை வஞ்சியாதிருக்க, தேவனை சார்ந்து கொள்கிறேன் (2:19)



15. கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேட, மேலானவைகளையே நாட, நான் தேவனை சார்ந்து கொள்கிறேன். (3:1,2)
16. என்னில் விபசாரம், அசுத்தம், மோகம், துர் இச்சை, விக்கரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற என் அவயவங்களை, அழித்துப்போட என் தேவனை சார்ந்து கொள்கிறேன். (3:5)
17. கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் வரும் தேவ கோபக்கினைக்குத் தப்ப என் தேவனை சார்ந்து கொள்கிறேன். (3:6)
18. கோபமும், மூர்க்கமும், பொறாமையும் என் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய, இவைகளையெல்லாம் விட்டு விட தேவனை சார்ந்து கொள்கிறேன். (3:8)
19. நான் ஒருவரோடும் பொய் சொல்லாதிருக்க, தேவனை சார்ந்து கொள்கிறேன் (3:9)
20. நான் பழைய மனுஷனையும், என்னிலிருந்த செய்கைகளையும் களைந்து போட தேவனை சார்ந்து கொள்கிறேன். (3:9)
21. என்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய், பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்து கொள்ள, தேவனை சார்ந்து கொள்கிறேன். (3:10)

## கிருபையின் ஊழியங்களின் திருவசனத் தேர்வு 2014

| பிரிவு | வயது | மனப்பாடபகுதி | மொத்த வசனங்கள் |
|---|---|---|---|
| 1. | 8-14 | கொலோசெயர், சங்கீதம் 2, 24, 27, 34, 37 | 193 |
| 2. | 15-30 | 1தீமோத்தேயு, 2தீமோத்தேயு, யூதா | 221 |
| 3. | 31-45 | 1தெசலோனிக்கேயர், 2தெசலோனிக்கேயர், யாக்கோபு | 244 |
| 4. | 45க்கு மேல் | பிலிப்பியர், 1பேதுரு | 209 |

தேர்வு நாள் : **2014 செப்டம்பர் 28 - மாலை 3 மணி முதல் 4.30 மணி முடிய**

*ஒவ்வொரு பிரிவிற்கும்*

| | |
|---|---|
| முதல் பரிசு | **1 கிராம் தங்க நாணயம் + வேதாகமம்** |
| 2வது பரிசு | **கிராம் தங்க நாணயம் + வேதாகமம்** |
| 3 வது பரிசு | **வேதாகமம்** |

**தேர்வு மையம் வாரியாக சிறப்பு பரிசு உண்டு.** தேர்வினை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம். பயன்படுத்த வேண்டிய ஆங்கில வேதாகமம் NKJV மொழியாக்கம். தேர்வை நீங்கள் உங்கள் ஆலயத்தில், ஜெபஜக்கியத்தில், பள்ளி, கல்லூரியில் எழுதலாம். ஒரு தேர்வு மையத்திற்கு 25 பேருக்குக் குறையாமல் எழுத வேண்டும்.

தேர்வு பதிவுக் கட்டணம் : **ரூ. 30**/- மட்டும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

கிருபையின் ஊழியங்கள் - +91 89038 79026, 94421 20257, 94431 95395

## கிருபையின் ஊழியங்கள் மூலம் ஆலயமில்லா கிராமங்களில் மிஷனெரி ஊழியங்கள் நடைபெறும் மாவட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1. தூத்துக்குடி | 5. மதுரை | 8. ஈரோடு |
| 2. நெல்லை | 6. திருச்சி | 9. கோயம்புத்தூர் |
| 3. கன்னியாகுமரி | 7. திருப்பூர் | 10. அரியலூர் |
| 4. விருதுநகர் | | |

### நமது ஊழியம் நடைபெறும் ஆலயமில்லா கிராம பணித்தளங்கள்

**தூத்துக்குடி மாவட்டம்**

1. ஆண்டாள்நகர்
2. சுப்பிரமணியபுரம்
3. புதுக்கோட்டை
4. தாதன்குளம்
5. பேட்மாநகரம்
6. ஸ்ரீமூலக்கரை
7. திருபுளியங்குடி
8. தட்டப்பாறை
9. தாளமுத்துநகர்
10. தூத்துக்குடி ரூரல்
11. பிரையன்ட் நகர்
12. பெரியநாயகபுரம் தலைமை அலுவலகம்

**விருதுநகர் மாவட்டம்**

13. ஏழாயிரம்பண்ணை
14. சாத்தூர் ரூரல்
15. சிவகாசி ரூரல்
16. முத்தாண்டியாபுரம்
17. புல்லக்கவுண்டன்பட்டி
18. புல்லலக்கோட்டை
19. பண்டுதன் பட்டி
20. என். திருவேங்கிடபுரம்
21. அப்பனேரி
22. முக்கூட்டுமலை
23. ஜமீன்சல்வார்பட்டி
24. செந்நெல்குளம்
25. நள்ளி
26. கன்னித்தேவன்பட்டி

**திருநெல்வேலி மாவட்டம்**

27. அத்தியூத்து
28. அழகப்பபுரம்
29. மைப்பாறை
30. மேலச்செவல்
31. அய்யனேரி
32. சின்னக்காளான்பட்டி
33. வேப்பிலாங்குளம்
34. வாகைக்குளம்
35. திருவேங்கடம்
36. முக்கூட்டுமலை
37. பாளையங்கோட்டை

**திருச்சி மாவட்டம்**

38. தோப்புப்பட்டி

**மதுரை மாவட்டம்**

39. திரளி

**அரியலூர் மாவட்டம்**

40. வெத்தியார்வெட்டு (மிஸ்பா)

**திருப்பூர் மாவட்டம்**

41. தொட்டிப்பாளையம்

**ஈரோடு மாவட்டம்**

42. பெருமா நல்லூர்

**கோயம்புத்தூர் மாவட்டம்**

43. துதியலூர் கோவை

### கிருபையின் ஊழியங்கள் மூலம் இதுவரை கட்டப்பட்டுள்ள ஆலயங்களின் விபரம்

**தூத்துக்குடி மாவட்டம்**

1. ஆண்டாள்நகர்
2. ஸ்ரீமூலக்கரை
3. தட்டப்பாறை
4. திருப்புளியங்குடி

**திருநெல்வேலி மாவட்டம்**

5. முக்கூட்டுமலை
6. அப்பனேரி
7. அழகப்பபுரம் (மிஷன் வீடு)
8. மைப்பாறை
9. வேப்பிலாங்குளம்
10. சின்னக்காளான்பட்டி (மிஷன் வீடு)

**விருதுநகர் மாவட்டம்**

11. புல்லக்கவுண்டன்பட்டி
12. புல்லலக்கோட்டை
13. பண்டுதன்பட்டி
14. ஜமீன்சல்வார்பட்டி
15. என். திருவேங்கடபுரம்
16. செந்நெல்குளம்
17. சாத்தூர் ரூரல்
18. முத்தாண்டியாபுரம்

**திருச்சி மாவட்டம்**

19. தோப்புபட்டி

**மதுரை மாவட்டம்**

20. திரளி

**தற்சமயம் கட்டிக் கொண்டிருக்கும் ஆலயம்**

1. பேட்மாநகரம்
2. சின்னக்காளான்பட்டி
3. அழகப்பபுரம்
4. திருவேங்கடம்

**கட்டப்பட வேண்டியவை**

1. திருவேங்கடம்
2. தொட்டிப்பாளையம்
3. நள்ளி
4. கன்னித்தேவன்பட்டி
5. பெருமளஞ்சி



## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | SBIN0007629<br>TMBL0000156 | SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | 10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

கடிதம் மற்றும் M.O. அனுப்ப தொடர்பு முகவரி :

**சகோ. B. பொற்செல்வன் ஆசீர்**

**கிருபையின் ஊழியங்கள்,** ஆபிரகாம் நகர், பெரியநாயகபுரம், தூத்துக்குடி-628 101.

Grace Ministries, Abraham Nagar, Periyanayagapuram, Tuticorin-628 101.

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும்.

நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2014 ஜுலை 29 – கடைசி செவ்வாய்**

**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

**இடம் : காமராஜர் திருமண மண்டபம், பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**

*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

## விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை தேவனுடைய கூடாரத்தில் திறப்பின் வாயில் ஜெபம்

**2014 ஜுலை 30, கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*தேவசெய்தி :* **Dr. சிஷித் லைசாண்டர்** விருதுநகர்

**சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**

கிருபையின் ஊழியங்கள், தூத்துக்குடி

**நீங்களும் வாருங்கள்!** **கலந்து கொள்ளுங்கள்!**

**இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!**

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194